

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள ரஷ்ய நாட்டுத் துணைத் தூதர் வலேரி கோட்ஷேவ் அவர்கள் (Mr. Valerii Khodzhaev) சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், ரஷ்ய நாட்டு துணைத் தூதரகத்தின் செயலாளர் ஆண்ட்ரி எரோஹின் (Mr. Andri Erohin), ஒன்றிய வெளியுறவுத் துறை மண்டல கடவுச்சீட்டு அலுவலர் மற்றும் மண்டல தலைமை அலுவலர் டாக்டர் எஸ். விஜயகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்க நிர்வாகிகள், இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு சங்க நிர்வாகிகள் என். தேவதாஸ், பாய்வா, ஏ.பி. முருகன், தங்கச்சிமடம் அனைத்து விசைப்படகு நாட்டுப்படகு மீனவர் சங்கத்தின் தலைவர் வி.பி. சேசுராஜா, பொருளாளர் ஆர். சகாயம், இணை செயலாளர் பி. ஆல்வின், பாம்பன் நாட்டுப்படகு மீனவர் நல உரிமைச் சங்கத்தின் தலைவர் எஸ்.பி. ராயப்பன், நிர்வாகி ஆரோக்கிய தீபக், மண்டபம் அனைத்து விசைப்படகு சங்க நிர்வாகிகள் ஜாகீர் உசேன், வாசீம் ஆகியோர் சந்தித்து, இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதையும், மீனவர்களின் மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்வதையும் தடுத்திட ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர். இச்சந்திப்பின்போது, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி. கனிமொழி, நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், மாநில மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஜோசப் ஸ்டாலின், துணைச் செயலாளர் ரவிச்சந்திரன் ராமவன்னி ஆகியோர் உடனிருந்தனர்.

# திருச்சி - மதுரையில் டைடல் பூங்கா!

## முதல்வர் தொடங்கி வைத்தார்... முதல் பக்கத் தொடர்ச்சி

ரூ.403 கோடி மதிப்பீட்டில் 5.58 லட்சம் சதுரஅடி பரப்பளவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் IT, ITeS, BPOs, Startups போன்ற நிறுவனங்கள் இடம் பெறும் வகையில் புதிய டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.

**மதுரை மாவட்டத்தில் புதிய டைடல் பூங்கா!**

மேலும், மதுரை மாவட்டத்தில், மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணியில் 314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.34 லட்சம் சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் பன்னிரண்டு தளங்களுடன், IT, ITES, BPOs, Startups போன்ற நிறுவனங்கள் இடம் பெறும் வகையில் புதிய டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இப்பூங்காக்கள் சுமார் 12,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பு, குளிர் சாதன வசதிகள், 24X7 பாதுகாப்பு வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன. இதன்மூலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்கள் மற்றும் அவற்றின் சுற்றுப்புற மாவட்டங்களைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்கே.என். நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் வெப்பம் அதிகரிக்கும்!

சென்னை, பிப்.19-

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். ஓரிரு இடங்களில் அதிக பட்ச வெப்பநிலை இயல்பை விட 2° 3° செல்சியஸ் அதிகமாக இருக்கக் கூடும். காலை வேளையில் பொதுவாக லேசான பனி மூட்டம் காணப்படும். 20 ந் தேதி முதல் 22ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும்.

ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2° 3° செல்சியஸ் அதிகமாக இருக்கக் கூடும். 23ந் தேதி மற்றும் 24ந்தேதி தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# கலைஞரின் கருத்தோவியம்



"**மொ**ழி ஊடுருவல்"
முளையிலேயே கிள்ளி எறிய
வேண்டியதாயிற்றே,

கொஞ்சம் வளர
விட்டாலும் நாட்டின் எல்லா
துறைகளிலுமே அது நஞ்சினைக்
கலந்து விடுமே,

நாளாவட்டத்தில் நம்
செந்தமிழையே
சிதறிடச் செய்திடும்!

நம் வருங்கால
வழித்தோன்றல்களையும்
வழி மாற வைத்துவிடுமே!

# எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் 20 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப்.19-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் உதவி ஆப்செட் மிஷின் டெக்னீஷியன் மற்றும் காலங்குறிப்பவர் (நிலைII) பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 19 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் மஸ்தூர் பணியிடத்திற்கு ஒரு நபருக்கும் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் கீழ் இயங்கும் அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களை புத்தாக்கம் செய்வதற்காக இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை அரசு மைய அச்சகத்திற்கு

1 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வண்ண எண்ணிம உற்பத்தி அச்சுப்பொறி ஒன்று மற்றும் அரசு மைய அச்சகம் மற்றும் 5 கிளை அச்சகங்களுக்கு சுமார் 6 கோடியே 20 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 11 வகையான இயந்திரங்கள் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், திருச்சிராப் பள்ளி அரசு கிளை அச்சகத்திற்கு அச்சிடப்பட்ட படிவங்கள், பதிவேடுகளை இருப்பு வைத்து பராமரிக்க ஏதுவாக 1 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பில் போதிய கட்டமைப்பு வசதியுடன் கூடுதல் கட்டடம் 9,456.97 சதுர அடி பரப்பில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அத்துடன் கடந்த 4 ஆண்டுகளில் 14 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**உதவி ஆப்செட் மிஷின் டெக்னீஷியன் மற்றும் காலங்குறிப்பவர் (நிலைII) பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 19 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் மஸ்தூர் பணியிடத்திற்கு ஒரு நபருக்கும் பணிநியமன ஆணைகள் வழங்குதல்**

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் நேரடி நியமனம் வாயிலாக நியமனம் செய்ய உதவி ஆப்செட் மிஷின் டெக்னீஷியன் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 17 நபர்களுக்கும், காலங்குறிப்பவர் (நிலைII) (Time Keeper GradeII) பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 2 நபர்களுக்கும் மற்றும் பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளரின் வாரிசுதாரர் ஒருவருக்கு கருணை அடிப்படையில் மஸ்தூர் பணியிடத்திற்கும், என மொத்தம் 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையர் திருமதி. வெ.ஷோபனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்த நிகழ்ச்சியில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி கலந்துகொண்டு வானூர் வட்டம் திருவக்கரையில் உள்ள சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் திருக்குளம் அமைக்கும் திருப்பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்த சிறப்பான நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சேக் அப்துல் ரகுமான் , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி கே டி முரளி, ஒன்றிய செயலாளர்கள் மைதிலி ராஜேந்திரன், பி.கே.டி முரளி, கிளியனூர் ராஜி, கு.செல்வமணி, நகரச் செயலாளர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அன்புமணி, கௌதம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் T.D.Jராஜவேல் , மாணவர் அணி குணசேகரன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, வீர மணிகண்டன், மணிகண்டன் மீனவர் அணி மணி , மகளிர் அணி லட்சுமி குருவேல், வீரம்மாள், இளைஞர் அணி அமைப்பாளர்கள் , பொன்னுரங்கம், ராஜவேல், சுரேஷ், பிரவீன் குமார், செந்தில், ராஜசேகர், பிரேம், ஒன்றிய நிர்வாகிகள் வழக்கறிஞர் ஜானகிராமன், ஞானசேகரன், ஆறுமுகம், செல்வமணி, பாஸ்கர், தனசு, வீரப்பன், திருவக்கரை கிருஷ்ணன், ரமேஷ், வெங்கடேசன், செல்வம், முத்து, கார்த்திகேயன், குழந்தைவேலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசின் செயல்பாடு மிகவும் திருப்தியாக உள்ளது !

## ஒன்றிய இணை அமைச்சர் பாராட்டு!

சிவகாசி, பிப்.19-

தமிழக அரசின் செயல்பாடு மிகவும் திருப்தியாக உள்ளது என ஒன்றிய இணை அமைச்சர் தெரிவித்தார். விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய கார்ப்பரேட் விவகாரம் மற்றும் சாலைப்போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை இணை அமைச்சர் ஹரிஷ் மல்கோத்ரா நேற்று முன்தினம் ஆய்வு செய்தார். அதிவீரன்பட்டி அங்கன்வாடி மையத்திற்குச் சென்றபோது, குழந்தைகள் தமிழில் வணக்கம் தெரிவிக்க பதிலுக்கு அவரும் தமிழில் வணக்கம் தெரிவித்தார். பின்னர் உணவு தயாரிக்கும் கூடத்தை பார்வையிட்டார். உணவின் தரத்தை அறிய சாப்பிட்டு ருசி பார்த்து ஆய்வு செய்தார்.

இதேபோல் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு செய்த ஒன்றிய இணை அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறுகையில், “அங்கன்வாடி மையங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசின் செயல்பாடு மிகவும் திருப்தியாக உள்ளது. தமிழக அரசு ஒன்றிய அரசின் ஜல்ஜீவன் குடிநீர் திட்டம், பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டம் என பல்வேறு திட்டங்களை சிறப்பாக அமல்படுத்தி உள்ளது. இதற்காக தமிழக அரசை பாராட்டுகிறேன். தமிழகத்தில் சுகாதார திட்டங்கள் முறையாக செயல் படுத்தப்பட்டு வருகிறது” என்றார்.



கடலூர் கிழக்கு மாவட்டம் குறிஞ்சிப்பாடி தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் குறிஞ்சிப்பாடியில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார். குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வி.சிவகுமார் வரவேற்புரையாற்றினார். ஒன்றிய கழக செயலாளர்கள் பி.சுப்பிரமணியன், டி.காசிராஜன் ஆர் .நாராயணசாமி அவை தலைவர் ஆசிரியர் ராமமூர்த்தி உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.